6. அறிவிப்பு

உறுப்பினர் இல்லாததால் கவன ஈர்ப்பு தள்ளிவைப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. தள்ளிவைக்கப்படுகிறது.*

முற்பகல் 11–45

7. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 4 – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

(ஆ) கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

(அ) கோரிக்கை எண் 4 – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2005–2006 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 4 – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** *மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானிய கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.407,33,95,000/–, மூலதனக் கணக்கில் ரூ.42,31,89,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2578, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.*